செய்தி வெளியீடு எண் : 2309 நாள் : 20.11.2023

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா"இதழாளர் – கலைஞர்" குழுவின் சார்பில் "இதழாளர் – கலைஞர்" கருத்தரங்கம் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஆகியோர் தலைமையில்,**

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் திரு.செஞ்சி. கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

---

கோயம்புத்தூர் மாவட்டம், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா"இதழாளர் – கலைஞர்" குழுவின் சார்பில் "இதழாளர் – கலைஞர்" கருத்தரங்கம் இன்று(20.11.2023) மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் திரு.செஞ்சி. கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் / இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு இணைத் தலைவர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் "இதழாளர்–கலைஞர்" என்னும் சிறப்பு மலரினை கே,ஜி.மருத்துவமனை தலைவர் பத்மசி டாக்டர் ஜி.பக்தவத்சலம் அவர்கள் வெளியிட இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி சரசுவதி கண்ணையன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில், திருமதி பர்வீன் சுல்தானா அவர்கள், கவிஞர் கவிதாசன்

அவர்கள் மற்றும் புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள் பங்கேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "இதழாளர்–கலைஞர்" கருத்தரங்கம் கலைஞர் அவர்களின் பன்முக தன்மைகளை பற்றிய கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் /இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்–செயலர் திரு.த.மோகன்., இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கிராந்திகுமார்பாடி., இ.ஆ.ப., மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், இதழாளர்–கலைஞர் குழுவின் உறுப்பினர்களாகிய திரு.நக்கீரன்கோபால், திரு. கி.பாபுஜெயகுமார் (டெக்கான் க்ரோனிக்கல் நாளிதழ்) திரு.அருண் ராம் (டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்) திரு.கோவி.லெனின் (பத்திரிக்கையாளர்), துணை மேயர் திரு.இரா.வெற்றிசெல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.கார்த்திக், தேசிய தூய்மை பணியாளர் நலவாரிய துணைத்தலைவர் திருமதி.கனிமொழி, மண்டலக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்து முறை தமிழநாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், இந்திய அரசியலையே தீர்மானிக்கக் கூடியவராகவும் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் நமக்கு படைத்தளித்திட்ட மக்கள் நலத்திட்டங்களையும் வருங்கால இளைய தலைமுறையினர்கள் என்றென்றும் போற்றி புகழ்ந்திடும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மாநிலம் முழுவதும் ஜீன் 2023 முதல் ஜீன் 2024 வரை ஒரு வருட காலம் தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவுசெய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக. மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர் திரு.மு,க.ஸ்டாலின் அவர்கள் 02.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு அவர் நாட்டு மக்களின் நலன்காக்க ஆற்றிய பல்வேறு பணிகள் மற்றும் நாடு போற்றிய மகத்தான மக்கள் நலத் திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டும்,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய பணிகளில் அவரின் பரிமாணங்களைப் போற்றும் வகையில், பல்வேறு தலைப்புகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில், இணைத் தலைவர்கள், உறுப்பினர்–செயலர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட 12 குழுக்கள் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு,க.ஸ்டாலின் அவர்களால் 11.06.2023 அன்று அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் "இதழாளர்–கலைஞர்" என்ற குழுவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன்அவர்கள் குழுத் தலைவராகவும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான்அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.த. மனோதங்கராஜ் அவர்கள், இணைத் தலைவர்களாகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் திரு. த.மோகன், இ.ஆ.ப., அவர்கள் உறுப்பினர்–செயலராகவும் மற்றும் திரு.இந்து என். ராம் அவர்கள், திரு.நக்கீரன் கோபால் அவர்கள், திரு.கே. வைத்தியநாதன் அவர்கள், திரு.ஆர். விஜய சங்கர் அவர்கள், திரு.கி.பாபு ஜெயக்குமார் அவர்கள், திரு.அருண் ராம் அவர்கள், திரு.கோவி. லெனின் அவர்கள், திரு.மு.குணசேகரன் அவர்கள், திரு.தி.செந்தில் வேலன் (வேல் வீச்சு) அவர்கள் குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

இக்குழு ஆலோசனைகளின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "இதழாளர் – கலைஞர்" விழாக்குழு, கோயம்புத்தூர் மாவட்டம், வ.உ.சி.மைதானத்தில் "இதழாளர்–கலைஞர்" சிறப்பு புகைப்படக் கண்காட்சி அரங்கத்தினை கடந்த 18.10.2023 அன்று மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் தலைமையில், இதழாளர்–கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் / மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், இதழாளர் – கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத்தலைவர்/ மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள், இதழாளர்–கலைஞர் நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர் / மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோதங்கராஜ் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் பாரதியவித்யா பவன் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புகைப்படக் கண்காட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பல்வேறு பரிமாணம், தமிழ் அறிஞர்களுடன் கலைஞர், அரசியல் ஆளுமைகளுடன் கலைஞர், மாண்புமிகு பிரதமர்களுடன் கலைஞர், மாண்புமிகு குடியரசுத் தலைவர்களுடன் கலைஞர், கலைஞர் செயல்படுத்திய பல்வேறு நலத்திட்டங்கள் போன்ற தலைப்புகளில் புகைப்படங்கள் இடம்பெற்றது. இதழாளர் – கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 50,000 க்கும் மேற்பட்ட நபர்கள் பார்வையிட்டு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றினை பற்றி அறிந்துகொண்டுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பத்திரிகையாளராக, தன்னுடைய வாழ்க்கையை துவக்கி, பள்ளி பருவத்திலேயே மாணவ நேசன் என்ற பத்திரிகையில் பணியாற்றி முரசொலி வரை இதழாளராகவே திகழ்ந்தார். இதழாளராக தமது வாழ்க்கையை தொடங்கிய முத்தமிழிறிஞர் கலைஞர் அவர்களை பெருமை சேர்க்கும் வகையில் "இதழாளர்–கலைஞர்" என்னும் சிறப்பு மலரினை கோயம்புத்தூர், கே,ஜி.மருத்துவமனை தலைவர் பத்மசி டாக்டர் ஜி.பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டார். அதனை கோயம்புத்தூர், இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் செயலர் திருமதி சரசுவதி கண்ணையன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மேலும், இச்சிறப்பு மலரில் "முகில் கிழித்து வெளிவந்த முழு நிலவு" என்னும் தலைப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், "கலைஞருடன் நெருங்கிப் பழகிய ஆளுமைகள்" என்னும் தலைப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய "கலைஞர் அவர்களின் கட்டுரைகளை படித்தால் புழுவும் புலியாகும்", திராவிடர் கழகத் தலைவர் திரு. கி.வீரமணி அவர்கள் எழுதிய "இதழாளராக கலைஞர்" என்றும் வாழ்வார், கவிஞர் வைரமுத்து அவர்கள் எழுதிய "திரையாண்ட கலைஞர்", ஓவியர் டிராஸ்கி மருது அவர்கள் எழுதிய "கலைஞரும் நானும்", சென்னை கல்சர் இதழ் ஆசிரியர் திரு. ரங்கராஜ் அவர்கள் எழுதிய "கலைஞர் மக்களை எளிதில் சென்றடைய ஒன் லைனர்கள் பயன்படுத்துவதில் வல்லவர் ஆனார்", மூத்த பத்திரிகையாளர் திரு.ஐ.சண்முகநாதன் அவர்கள் எழுதிய நான் கண்ட 'கலைஞர்', "கலைஞரின் காலம் ஒரு பொற்காலம்",

**இக்கருத்தரங்கில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பேசியதாவது,**

ஒரு மனிதருக்குள் இத்தனை பரிணாமங்களா என்று கலைஞர் அவர்களை கண்டு வியந்து போயிருக்கிறேன். அவரின் அனைத்து பன்முகதன்மைக்கும் முன்னர் அவர் முதன்முதலாக, தன்னை ஒரு பத்திரிக்கையாளனாக உலகுக்கு அறிவித்தவர். மாணவ நேசன் , முரசொலி ஆகிய கையெழுத்து பிரதிகளை எழுதியவர். அந்த காலகட்டத்தில் மரப்பாலங்களை கடந்து ஏடுகளை எடுத்து செல்ல ஆட்களுக்கு கூலி கொடுக்க இயலாத காரணத்தால் ஏடுகளை தன்தோளில் சுமந்துகொண்டு மரப்பாலங்களை கடந்தவர். கலைஞர் அவர்களுக்கு "நூற்றாண்டு விழா கொண்டுவதற்கு அவருடைய மாணவன் என்ற வகையில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுத்து வழியாகவும், பேச்சு வழியாகவும், தொழில்நுட்பத்தையும் தமிழை அடுத்ததலைமுறை கொண்டு சேர்க்கவேண்டும் என்றால்,

தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவை, கலைஞர் அவர்களையும், தொழில்நுட்பம் வாயிலாக அடுத்த தலைமுறைக்கு கொண்டுசெல்லுங்கள். எழுதுவது அவ்வளவு சுலபம் கிடையாது. கலைஞர் அவர்களிடம் எழுத்து வேலைகளை குறைத்துகொண்டு ஓய்வெடுக்கலாம் அல்லவா என்று நான் கூறியபோது, நான் எழுதுவதே ஓய்வெடுக்கத்தான் , எழுத்துதான் எனக்கு ஓய்வு, எழுத்துதான் எனக்கு மருந்து, என கலைஞர் அவர்கள் கூறினார்,

தொழில்முறை எழுத்தாளர் என்பவர் யாராவது சொல்வதற்காகவும், ஊதியத்திற்காகவும் எழுதுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் லட்சியத்திற்காக எழுதியவர். என் தமிழ் ஆசான் கலைஞர் அவர்களின் பெருமையை பரப்பவேண்டுமென்றால் அந்த விழாக்கள் நடைபெறும் இடங்களின் இருபக்கங்களிலும் கலைஞர் அவர்களின் மேற்கொள் வரிகள் இடம்பெறச் செய்யுங்கள் என கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அவர்களின் வசனத்திலேயே கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

திருவள்ளுவருக்கு சொல்லால் உரை எழுதிவிட்டார். கட்டடத்தால் ஒரு கலைக்கூடம் கட்டினார். திருவாரூர் தேரை வள்ளுவர் கோட்டாத்தில் கட்டினார். தமிழ்நாட்டின் தென்எல்லையான கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவருக்கு சிலையை எழுப்பினார். வடக்கே வள்ளுவர் கோட்டம், தெற்கே திருவள்ளுவர் சிலை என திருவள்ளுவனுக்கு இடையில் எங்கள் தமிழ்நாடு இருக்கிறது என்று சொல்லிவிட்டு சென்ற ஞானி எங்கள் கலைஞர் அவர்கள் .

தென்னாட்டில் சமூகநீதி வெற்றிபெற்றது. வடநாட்டில் சமூகநீதி தோற்றாது. ஏனென்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலைஉணவு திட்டத்தின் ரசிகன் நான். இத்திட்டத்தின் பயனாக மாணவன் வயிறார சாப்பிடுகிறான். அதனால் ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் பாடம் மாணவனுக்கு புரிகிறது. குழந்தை உணவை பள்ளியில் சாப்பிடுவதால் தாய்மார்களின் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர். அத்துடன் அவர்களின் காலை நேர வேலைப்பளுவும் குறைந்துள்ளது. நம் தமிழ்நாட்டில் பள்ளிகளில் வழங்கப்படும் சத்துணவின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் ஒரே வரிசையில் அமர்ந்து சாப்பிடுகிறார்கள். ஆனால் வடநாட்டில் சத்துணவை பரிமாறும்போது மேட்டுக்குடி மாணவர்கள் ஒரு வரிசையிலும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒருவரிசையிலும் அமர்த்தப்படுகின்றனர். மேலும், தாழ்த்தப்பட்ட தாய்மார்களால் சமைக்கப்பட்ட உணவை சாப்பிட மேட்டுக்குடி மாணவர்கள் மறுக்கிறார்கள். இங்கு சமூக நீதி வெற்றிபெற்றது தமிழ்நாடா? வடநாடா? . இதையெல்லாம் பார்க்கும்பொழுது சமூக நீதியில் நம் தமிழ்நாடே

வென்றுள்ளது. 4168 பக்கங்கள் சுயசரிதை புத்தகத்தை எழுதியவர் கலைஞர் அவர்கள். நெஞ்சு நீதி நூலை வாசியுங்கள் கலைஞர் அவர்கள் எத்தனை பெரிய இதழாளர் என்பதை புரிந்துகொள்ளமுடியும். என்ஆசான் கலைஞர் அவர்களின் புகழ் வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன். என கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பேசினார்.

**இக்கருத்தரங்கில் கருத்துரிமையும், கலைஞரும் என்ற தலைப்பில் திரு.நக்கீரன்கோபால் அவர்கள் பேசியதாவது,**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 13வயதில் செல்வசந்திரா என்ற புதினத்தை எழுதியிருந்தார். நக்கீரன் இதழை நடத்திய என்மீது கடந்த ஆட்சிகாலங்களில் பல்வேறு வழக்குகள் போடப்பட்டன. பத்திரிக்கையை அச்சடிக்ககூடாது என்ற எச்சரிக்கைகள் எல்லாம் வந்தன. ஆனால் வழக்குகளில் இருந்து எங்களை விடுவித்ததும், பத்திரிக்கை நடத்த உதவியாகஇருந்ததும். அய்யா கலைஞர் அவர்கள்தான். கருத்துரிமைக்கு உதாரணமாக எங்களுக்கு பக்க பலமாக இருந்தவர் கலைஞர் அவர்கள். அதற்கு நாங்களே உதாரணமாக இருக்கின்றோம். கலைஞர் ஆட்சிகாலத்தில்தான் பள்ளிக்கூடங்கள் தமிழ் ஆசிரியர் தலைமையாசிரியராக பணியமர்த்தப்பட்டார்கள். கருத்துரிமையும், நாம்பெற்ற அனைத்து உரிமைகளுக்கும் பின்னால் கலைஞர் அவர்கள் தான் உள்ளார். என திரு.நக்கீரன்கோபால் அவர்கள் பேசினார்.

**இக்கருத்தரங்கில் தலைமுறைகள் கடந்த கலைஞர் என்ற தலைப்பில் திருமதி பர்வீன் சுல்தானா அவர்கள் பேசியதாவது,**

முத்தமிழறிஞர் அவர்கள் தமிழுக்கு, தமிழனுக்கு, தமிழ்நாட்டிற்கு பணியாற்றி இருக்கிறார்கள். தலைமுறை கடந்து நன்றியுடன் நினைவு கூறத்தக்கது. தமிழ்த்தாய் வாழ்த்தினை பாடும்போது குழந்தைகள் அனைவரும் அதன் அர்த்தம் புரிந்த பாடவேண்டும். கலைஞர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்தான் ஹீரோவாக இருந்தார். பாரதியார் புதுக்கவிதையின் நடை, அண்ணா அவர்களின் எழுத்து கலந்துதான் கலைஞர் எழுத்து நடையாகும். மாநிலங்களுக்கு திட்டக்குழு வேண்டும் என்று திட்டக்குழுவை உருவாக்கியவர். சுதந்திர தினத்தன்று கோட்டையில் தேசிய கொடியை ஏற்றலாம் என்றஉரிமையை பெற்றுத்தந்தவர். தமிழ்நாடு காவல் துறையில் முதலில் பெண்களை பணி அமர்த்தியவர். உழைப்பாளர் தினத்தில் உழைப்பாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பை அறிவித்தவர். ஆசியாவிலே மிகப்பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தையும், இந்தியாவிலேயே டாக்டர் அம்பேத்கர் பெயரில்

சட்டகல்லூரி மற்றும் சட்ட பல்கலைகழகத்தை உருவாக்கியவர். 2004ஆம் ஆண்டு தமிழுக்கு செம்மொழி அந்தஸ்த்தை பெற்றுத் தந்தவர். சாதிமதபேதமற்ற சமத்துவபுரத்தை கொண்டுவந்தவர்.

கலைஞர் அவர்களின் வெற்றிக்கு காரணம் அவர் தன்னளவில் என்றைக்கும் தோற்றதே கிடையாது. சிறந்த பேச்சளராக திகழ்ந்த ஒருவர், சிறந்த எழுத்தாளராக இருப்பதில்லை, சிறந்த எழுத்தாளர், சிறந்த பேச்சாளராக திகழ்ந்த ஒருவர் சிறந்த அரசியல்வாதியாக திகழ்வது கோடியில் ஒருவருக்கே வாய்ப்பாக கிடைக்கிறது. திரைப்பட கலைஞனாக, எழுத்தாளராக, பேச்சாளராக, பத்திரிகையாளராக, அரசியல் தலைவராக உலக அளவில் வெற்றி கொண்ட மாமனிதர் முத்தமிழறிஞர் கலைஞர். எந்தநிலையிலும் கலைஞர் அவர்களின் புகழுக்கு மரணமில்லை என திருமதி பர்வீன் சுல்தானா அவர்கள் பேசினார்.

**இக்கருத்தரங்கில் கலைஞரின் இதழியல் தமிழ் என்ற தலைப்பில் புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள் பேசியதாவது,**

இதழாளர் கலைஞர் அவர்களின் தமிழ் உணர்வை பற்றி பேசவந்துள்ளேன். தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை 1970 ஆம் ஆண்டு நடைமுறைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார். கோயம்புத்தூரில் இருந்துதான் அவருடைய கலைத்துறை வாழ்க்கை தொடங்கியது. இங்கு இதழாளர் கலைஞர் நிகழ்ச்சியை நடத்து மிகவும் பொருத்தமானது. மாணவநேசன் என்ற கையெழுத்து ஏட்டினை நடத்தினார். 1942 உருவான முரசொலி இதழ் தற்போது வரை வெளிவந்துகொண்டிருக்கிறது. வீழ்வது நாம இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும். என்று முரசொலி இதழில் இடம்பெற்றிருக்கும். ஆரம்ப காலங்களில் முரசொலியின் 8 –9 பக்கங்களை அவரை எழுதுவார். குடியரசு இதழுக்கு துணை ஆசிரியராக பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, சொந்தமாக இதழ்களை நடத்தி வளர்த்தவர் என புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள் பேசினார்.

**இக்கருத்தரங்கில் ஓய்வறியா சூரியன் என்ற தலைப்பில் கவிஞர் கவிதாசன் அவர்கள் பேசியதாவது,**

ஓய்வறியா சூரியனாக, ஓய்வறியா உழைப்பாளியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முத்தமிழில் முத்தெடுத்து இதழாக, இலக்கியமாக, பேச்சாக முத்தமிழை வழங்கி இருக்கிறார்கள். முத்தமிழறிஞருக்கு நூற்றாண்டு விழா மட்டுமல்லா, முத்தமிழுக்கு முடிசூட்டு விழாவாகும். படுத்துகிடக்கும் சோம்பேறிக்கு பகல்கூட இரவுதான் , எழுந்து நடப்பவனுக்கு திரும்பும் திசையெல்லாம் கிழக்குதான் என்பதை உணர்த்தியவர் நம்முடைய போற்றுதழுக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். மூச்சுவிடுபவன் எல்லாம்

மனிதன் இல்லை. முயற்சி செய்பவனே மனிதன் என்பதற்கு முன்னுதரணமாக திகழ்ந்தவர்.

எல்லாருக்கும் வயிறு பசிக்கும் அவருக்கு மட்டும் மூளை மட்டுமே பசித்ததால், முத்தமிழை இதழாக, இலக்கியமாக வழங்கி இருக்கிறார்கள். தமிழ் மண்ணுக்கு பணியாற்றும் என் தலையில் இருக்கும் கீரிடத்தை யார் வேண்டுமானாலும் பறிக்காலம், என்கையில் இருக்கும் போர்வாளை யாராலும் பறிக்கமுடியாது. என்று முதலமைச்சராக பொறுப்பேற்ற 1969 ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூறினார்.

சிப்காட் , பெண்களுக்கு 33 சதவீதம் உள்ளாட்சி இடஒதுக்கீடும், பெண்களுக்கு சொத்துரிமையையும் கொண்டுவந்தவர். சமச்சீர் கல்வி, உழவர் சந்தை, தமிழ்செம்மொழி, குறளோவியம், வள்ளுவர் கோட்டம், தொல்காப்பிய பூங்கா உள்ளிட்ட எண்ணற்ற நூல்களை தந்தவர். அவர் படித்துக்கொண்டே எழுதியவர். செங்கோலையும், எழுதுகோலையும் தாங்கிபிடித்து உயர்த்தினார். புத்தகத்தில் உலகத்தை படித்தால் அறிவு வளரும். உலகத்தை புத்தகமாக படித்தால் அனுபவம் வளரும். அறிவு என்பது பெற்றுகொள்வது, அனுபவம் என்பது கற்றுக்கொள்வது. என்றவர் கலைஞர் அவர்கள். கோயம்புத்தூர் கலைஞர் அவர்களுக்கு மிக நெருக்கமாக ஊராகும். 75 படங்களுக்கு மேல் தன்னுடைய தனிப்பாணியில் வசனத்தை எழுதினார். தமிழ்நாட்டில் தோன்றிய பெரிய சமூக புரட்சியாளர். தன்னுடைய 94 வயது வரை ஓயாது உழைத்துக் கொண்டிருந்தார். என கவிஞர் கவிதாசன் அவர்கள் பேசினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in